நல்லூர் ... யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 29 வெள்ளிக்கிழமை (11-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 195

## கொழும்பு திரும்பியதும்

# யுத்த நிறுத்தம் செய்யுமாறு கோரி சமாதானக் குழு சிபார்சு செய்யும்

## செய்தியாளர் மாநாட்டில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

சர்வதேச சமாதானக் குழு கொழும்பு திரும்பியதும சில சிபார்சுகளைத் தெரிவிக்கும். அவற்றில் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக யுத்தநிறுத்தம் செய்யுமாறு கோரும் சிபார்சும் இடம்பெறலாம்

கடந்த மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற ஐவர் கொண்ட சர்வதேச சமாதானக் குழுவினர் நேற்றுக் காலை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற பிரஸ்தாப செய்தியாளர் மாநாட்டில் சமாதானக் குழு அங்கத்தவர்கள் ஐவரும் செயலாளர் திரு. வில்லியம்ஸும் பங்குபற்றினர்.

செய்தியாளர்களின் பல கேள்விகளுக்கு குழுவின் செயலாளரே பதிலளித்தார். பிரஸ்தாப மாநாட்டில் வெளியிடப்பட்ட தகவல்களை கேள்வி பதில் வடிவத்தில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கைதாகும் தமிழருக்கு அடையாளப் பத்திரம்

### கொழும்பில் புதிய நடைமுறை

கொழும்பு, ஜூன் 11

ஒரு முறை கைது செய்யப்படுபவர் மீண்டும் கைதாவதைத் தவிர்ப்பதற்காக கொழும்பில் கைதாகும் தமிழர்களுக்கு அடையாளப் பத்திரம் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட உள்ளது. கைதாகும் தமிழர்களின் வாக்குமூலங்களை தமிழிலேயே பதியவும் நடவடிக்கை எடுக்கப்படும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது.

கொழும்பில் தமிழர்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டு

6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான குழுவிடம் நேற்று போர்க்கைதிகள் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 38 சிங்களப் பொலீஸாரையும், இராணுவ சிப்பாயையும் வெளிநாட்டு சமாதான குழுவினர் நேற்று சந்தித்துப் பேசினர். அப்போது போர்க் கைதிகள் தூதுக்குழுவினரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

நேற்று முற்பகல் 9 மணி முதல் சுமார் அரைமணி நேரம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

தூதுக்குழுவினரும், காவலில் உள்ள போர்க் கைதிகளும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

போர்க் கைதிகள் அனைவரும் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை நேற்றைய சந்திப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியான

# மன்னாரில் அதிரடித் தாக்கு; 5 பொலீஸார் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.40 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய குறுகிய நேர அதிரடித் தாக்குதலில் 5 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தள்ளாடி இராணுவ முகாமிற்கும் மன்னார் தீவுக்கும் இடையில் கடற்பாதையில் அமைந்திருந்த பொலீஸ் காவலரண் ஒன்றின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஏழு நிமிட நேரம் நடந்த இந்த அதிரடித் தாக்குதலில் நான்கு பொலீஸார் கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் பலவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

தாக்குதலில் நான்கு பொலீஸார் கொல்லப்பட்டதையும் இருவர் காயமடைந்ததையும் கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒப்புக் கொண்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காவலில் இருக்கும்

## பொலீஸார் குறித்து நேற்று ராணுவ அதிகாரி பிரஸ்தாபம்

கொழும்பு, ஜூன் 11

வடபகுதியில் விடுதலைப் புலிகள் தடுத்துவைத்துள்ள 39 பொலீஸார் பற்றி நேற்று கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கம்மன பிரஸ்தாபித்தார்.

அவர் சொன்னதாவது:-

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் 39 பொலீஸாரையும் விடுவிப்பது தொடர்பாக அரசு சகல முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

கடந்த ஆறு மாதங்களாக

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ‘சுமண’ ராணுவ நடவடிக்கை பூர்த்தியாகும்

மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிகல காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த ‘சுமண’ இராணுவ நடவடிக்கை ஒரு சில தினங்களுக்கு முன் பூர்த்தி செய்யப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தொப்பிகல காட்டுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவல் செய்வதைத் தடுப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் அங்கு மூன்று முகாம்களை அமைத்துள்ளனர் என்று பிரிகேடியர் அங்கம்மன நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஒ-7)

### இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 11

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக் கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது (ஒ)

## பூநகரி பாதை விவகாரம்; விரைவில் உடன்பாடு வரும்

### ஐ. நா. அதிகாரி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11

“பூநகரிப்பாதை விவகாரம் குறித்து விரைவில் உடன்பாடு ஒன்று ஏற்படும் என நான் நம்புகின்றேன்”

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இலங்கை விதிவிடப் பிரதிநிதி கலாநிதி பீற்றர் நிக்கலஸ் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்த அவர் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இரண்டு கட்டப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

நேற்றைய இரண்டாம் கட்டப் பேச்சு சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் ஆகியோர் பங்குபற்றினர்.

பூநகரிப் பாதையை திறப்பது சம்பந்தமான ஒழுங்கு முறைகளைக் கொண்ட ஒப்பந்தம் பற்றி நேற்றைய பேச்சில் இருதரப்பினரும் விரி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பாபாவை சவான் சந்தித்து கவலை தெரிவித்தார்

இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று புட்டபத்தியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் நிலையத்துக்கு விஜயம் செய்து பகவானைச் சந்தித்து தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன் பகவான் கொலை முயற்சி தொடர்பாக விசாரணை நடத்திவரும் புலனாய்வுத்துறை அதிகாரிகளையும் அவர் சந்தித்து உரையாடினார்.

கடந்த ஞாயிறன்று கொலை முயற்சி ஒன்றில் இருந்து பகவான் தப்பியது தெரிந்ததே. (இ)

## மட்டக்களப்பில் நேற்று ஆரம்பமான

# ‘கடற்காற்று’ நடவடிக்கையில் 3 ஆயிரம் படையினர் ஈடுபாடு

கொழும்பு, ஜூன் 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் “முஹுது சுலங்” (கடற் காற்று) என்ற புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் நேற்றுக் காலை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந் நடவடிக்கையில் 3 ஆயிரம் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

வாழைச்சேனைக்கு வடக்கே வாகரை, மாங்கேணி காயாங்கேணி, கதிரவெளி ஆகிய பகுதிகளில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன இத் தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மானிப்பாய்

## மெமோறியல் ஆங்கில பாடசாலை

# 157 ஆவது

## ஆண்டு நிறைவு விழாவும்
## பரிசளிப்பும் மலர் வெளியீடும்

காலம்:- 12–06–1993 சனிக்கிழமை
நேரம்:- பி. ப. 4.00 மணி
இடம்:- கல்லூரி மைதான அரங்கு
தலைவர்:- திரு. அ. மு. அருணாசலம்
பிரதம விருந்தினர்:- திரு. இரா. சுந்தரலிங்கம் (வட பிராந்தியக் கல்விப்பணிப் பாளர்)
பரிசில் வழங்குபவர்:- திருமதி. தேவராணி சுந்தரலிங்கம்
மலர் வெளியீட்டுரை:- திரு. சி. வேலாயுதம் (பி. க. ப. யாழ்ப்பாணம்)
மலர் ஆய்வுரை:- பேராசிரியர் அ சண்முகதாஸ்
ஆசியுடன் மலர் முதற்பிரதி பெறுபவர்- சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

பெற்றோர், பழையமாணவர் நலன்விரும்பிகள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

அபதிர், ஆசிரியர்,
மாணவர்

26062)



## திருநிலைப்படுத்தும் ஆராதனை

தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயத்தின்
மூன்றாவது அத்தியட்சகர்
அதி. வணக்கத்துக்குரிய கலாநிதி
சுப்பிரமணியம் ஜெபநேசன்

அவர்களை திருநிலைப்படுத்தும் ஆராதனை ஜூன் மாதம் 12 ஆம் திகதி மாலை 3-00 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசனக் கோயிலில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பகிரங்கக் கூட்டம் யாழ்ப்பாணக் கல்லூரிப் பூங்காவில் நடைபெறும்.

அன்பர்கள், நண்பர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கு. இராஜநாயகம்
பதில் அதிபர்

(சி/5246)



சாவகச்சேரி கோவில்குடியிருப்பு
ஞான வீரபத்திரர் தேவஸ்தான
## வருடாந்த அலங்கார உற்சவம்

டி தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை (12-06-93) காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி 21-06 93 வரை (10 தினங்கள்) நடைபெறும்.

உற்சவ காலத்தில் இரவு 7 00 மணி தொடக்கம் 8.00 மணி வரை கம்பன் கழகத் தலைவர் திரு தி. திருநந்தகுமார் அவர்கள் கம்பராமாயணம் பற்றி தொடர் விரிவுரை நிகழ்த்துவார்.

ஆலய பரிபாலன சபையினர்

(சி/5245)



Computer Programming
in
BAISC Language
4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 19 - 06 - 1993
8 30 மணி

Lectures By: S P. Sivapathasunadram
MIDPM (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ 400/ மட்டுமே

C.I.M.A., I.A B. LOTUS 1-2-3
SHORT-HAND & TYPING நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

SCHOOL OF BUSINESS
ADMINISTRATION
(pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.

சி-5243)


## இன்று

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் பிரதம கிரியாகுரு பிரம்மஸ்ரீ பூ. பூரணச்சந்திரக் குருக்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை ஆலய மண்டபத்தில் பாராட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது. (க-72)

o o o

அத்தியடி விநாயகர் கோவில் முன்றலில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுகாதாரக் கருத்தரங்கும் நீரிழிவு வைத்திய பரிசோதனையும் நடைபெறவுள்ளது. (க)

o o o

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 30 மணிக்கு ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறும்.

சுண்டிக்குளி சைவமகா சபையினர் நடத்தும் குருபூசையில், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை சொற்பொழிவு ஆற்றுவார்.

(க-17)

## ஒய்வூதிய வவுச்சர்கள் தபாலில்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் மே மாதத்துக்குரிய வவுச்சர்கள் இன்று முதல் அனுப்பப்படவிருக்கின்றன.

மே, ஜூன் மாத வவுச்சர்கள் கொழும்பில் இருந்து வந்து சேர்ந்த போதும், மே மாத வவுச்சர்களே இன்று அனுப்பப்படவிருப்பதாகவும்—

ஜூன் மாத வவுச்சர்கள் அடுத்த வாரமே அனுப்பப்படும் என்றும் — ஓய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. எஸ். வீரசிங்கம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் மே மாத வவுச்சர்களும்—

ரயில்வே ஓய்வூதியர்களின் மே, ஜூன் மாதங்களுக்குரிய வவுச்சர்களும் — அந்த அந்த வங்கிகளுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நாளை

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது (இ-5)

## கலைவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழகத்தின் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர். திரு வே, பொ. பாலசிங்கம் விழாவிற்குத் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

(ஒ-111)


A/L 95
அளவையியல்-
புதிய பிரிவு

ஆரம்பம்: 12-6-93
சனி பி.ப. 5.00

திரு. யுகபாலசிங்கம்
பொருளியல்-
திரு. E. பிரபாகரன்
தமிழ், இந்து நாகரிகம்
திரு. தாஸ்
கிறீஸ்தவம்-
திருமதி A. மல்லிகா

SHAMROCK
[illegible]
(26061)


## துப்பாக்கி ரவை வெடித்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம் ஜூன் 11

துப்பாக்கி ரவை ஒன்றின் மீது ஆணியை வைத்து கல்லால் குத்திய போது அது வெடித்துச் சிதறியதில் குத்திய சிறுவன் காயமடைந்தான்.

கொக்குவிலில் இச்சம்பவம் நடந்தது இச்சம்பவத்தில், வேலணையில் இருந்து இடம்பெயர்ந்த வந்த இரத்தினசிங்கம் இசைநாதன் [13 வயது என்ற சிறுவனே காயமடைந்தார்.

காயமடைந்த சிறுவன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான். (ஒ-15)


ஊர்காவற்றுறை ப. நோ, கூ. சங்கம்
## வாக்காளர் பட்டியல் 31-03-93

எமது சங்கத்தின் 31-03-93 வரையிலான வாக்காளர் பட்டியல்
கிளை 1, 2 க்குரியவை—நிவாரணக் கிளை 1 இலும்
கிளை 9, 10, 12 க்குரியவை—நிவாரணக் கிளை 2 இலும்
கிளை 18, 1, க்குரியவை—நிவாரணக் கிளை 3 இலும்

அங்கத்தவர் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் 21-06-93 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம், "செயலாளர், ஊர்காவற்றுறை ப.நோ கூ.சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர் (சி/5311) தலைவர்



இரண்டு சில்லு உழவு இயந்திரம்
## கொள்வனவுக்கான கூறு விலை கோரல்

எமது சங்க பாவனைக்காக இரண்டு சில்லு உழவு இயந்திரம் (லான் மாஸ்ரர்) பெட்டியுடனும், ஏனைய இணை உபகரணங்களுடனும் கொள்வனவு செய்யப்படும். இதற்கான கூறு விலை அனுப்ப விரும்புவோர், 15-07 1993 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்
சுன்/மல்/அள/தெ. ப. பொ. கூ. வி. சங்கம்.

தொடர்பு;-
பொதுமுகாமையாளர்,
தெ. ப. பொ. கூ. வி. சங்கம்
சுன்/மல்/அள/வரையறுக்கப்பட்டுள்ளது.

(26063)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவியும், முன்னை நாள் ஆசிரியையும், பிரபல சமூக சேவையாளரும், சமாதான நீதிவானுமான திரு. க. இ குமாரசாமியின் அன்புத் துணைவியாருமான

திருமதி சரஸ்வதி குமாரசாமி
அவர்களின்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
அபிவிருத்திச் சபை, சங்கம்.

யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்,
கோப்பாய்.

[26060]



## மூன்றாம் ஆண்டு ஞாபகார்த்தம்



| இம்மை | மறுமை |
| --- | --- |
| 28 | 11 |
| 08 | 06 |
| 1908 | 1990 |

அமரர்
அருணாசலம் எட்வேட் இரத்தினசாமி
(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், சமாதான நீதிவான்)

"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்"

11 கொரி 5 : 1

உங்கள் பிரிவால் துயருற்று
உங்களை அன்புடன் நினைவுகூரும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

368/3A, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5236)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார போக்குவரத்துத்தடைகளை நீக்கி

# தீர்வுக்கு முன்னோடியாக யுத்தத்தை நிறுத்துமாறு அரசிடம் வலியுறுத்துக!

## சமாதானக் குழுவிடம் இந்து அமைப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

★ தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குதல்

★ போக்குவரத்துக்காக பூநகரி பாதையைத் திறந்து விடுதல்

★ தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு முன்னோடியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுதல்

★ தமிழ் மக்களின் அமைதிக்கும், சாந்திக்கும் உறைவிடமாக விளங்கும் ஆலயங்கள் மீது நடத்தப்படும் குண்டு வீச்சுத் தாக்குதலை நிறுத்துதல்.

இந்த நான்கு விடயங்களையும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு கொழும்பு அரசாங்கத்திடம் வலியுறுத்துமாறு யாழ். வந்திருந்த வெளிநாட்டு சமாதானக் குழுவிடம் இந்து அமைப்புக்கள் கோரிக்கையை விடுத்தன.

வெளிநாட்டு சமாதானக் குழுவினர் நேற்றுமுன் தினம் பிற்பகல் இங்குள்ள இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சைவ பரிபாலனசபை, அகில இலங்கை இந்து காங்கிரஸ், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம், இலங்கை இளம் கலைஞர்மன்றம், சைவ வித்தியாவிருத்திச் சங்கம், திவ்விய ஜீவன சங்கம், இந்து சமயப் பேரவை, இந்து இளைஞர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளும், அந்தணப் பெருமக்களும், ஆலயப் பூசகர்களும் தூதுக் குழுவினருடன் கலந்துரையாடினர்.

தூதுக்குழுவினருடன் யாழ். ஆயர் அதி மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், வண பிதாக்கள் ஏ. ஜே. வி. சந்திரகாந்தன், எம். ஜி பயஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என்றும், பூநகரிப் பாதையைத் திறக்க வேண்டும் என்றும் கோரினார்.

ஆத்மஜோதி முத்தையா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திவ்வியஜீவன சங்கத் தலைவர் திரு. எஸ் கனகரத்தினம், சிவதர்மவள்ளல் கலாநிதி க. கனகராசா உட்பட மற்றும் பலரும் மேற்கண்ட விடயத்தை வலியுறுத்தினர்.

கலந்துரையாடல் முடிவுற்ற பின்னர் தூதுக்குழுவினரின் விஜயத்தை நினைவு கூரும் வகையில் மரம்நாட்டு வைபவமும் இடம் பெற்றது.

(அ-க-3)

## ராஜீவ் வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, ஜூன் 11

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை இம் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி துரைசாமி பதில் மனுவைத் தாக்கல் செய்ய கால அவகாசம் கேட்டார்.

அதனைத் தொடர்ந்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-எ)

## அகதி முகாம் மக்களை நேரில் சந்தித்துப் பேசினர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அரியாலை, மானிப்பாய் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்கு வெளிநாட்டு சமாதானக்குழுவினர் நேற்று முன்தினம் விஜயம் செய்தனர்.

காலையில், மானிப்பாய் பகுதியில் உள்ள சில முகாம்களுக்கு சென்ற அவர்கள் அங்குள்ள மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்தனர்.

மாலையில் அரியாலையில் பூம்புகார் பகுதியில் அமைந்துள்ள அகதிமுகாம்களுக்கும் அவர்கள் விஜயம் செய்து மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்களைப் பார்த்தும், கேட்டும் அறிந்தனர்.

### சிதைந்த நூலகத்தை பார்த்தனர்

வெளிநாட்டு சமாதானக் குழுவினர் நேற்று முன்தினம் காலை யாழ். பொதுசன நூலகத்தின் சிதைந்த கட்டடத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

ஸ்ரீலங்கா அரசின் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களால் நூலகம் சிதைந்த காட்சி குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபைக் கட்டடம், கோட்டைப் பகுதியில் இடிந்த கட்டடங்கள் ஆகியவற்றையும் அவர்கள் பார்வையிட்டனர்.

யாழ். நகரப்பகுதியில் சேதமடைந்த கடைகள் மற்றும் பொதுநிறுவனங்களின் சேதமடைந்த கட்டடங்களையும் அவர்கள் பார்வையிட்டு அதிர்ச்சி வெளியிட்டனர்.

இடிந்த கட்டடங்களை அவர்கள் படமெடுத்தனர்.

தூதுக்குழுவினர் அன்று காலை 10-30 மணியளவில் யாழ். செயலகத்தில் அரச அதிபர் மற்றும் செயலக உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின் போது குடாநாட்டிற்கு வெளியே செல்வதற்கு ஏற்றதொரு போக்குவரத்துப் பாதையின்றி மக்கள் படும் இன்னல்கள், உணவுக் கப்பல்களின் வருகை குறைவால் இங்கு ஏற்படும் உணவுப் பற்றாக்குறை மற்றும் தமிழர் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியம் என்பவற்றையே உயரதிகாரிகள் பலரும் எடுத்து விளக்கினார்;

[அ-3-162]

## நிவாரணத்துக்கு அதிக நிதி; நோர்வேயிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11

''போரூட்'', ''நொறாட்'' அமைப்புகளின் பிரதிநிதிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினர்.

''போரூட்'' நிறுவனத்தின் பிரதிநிதியான திரு. போல் ஹென்றி கீல்லான், ''நொறாட்'' அமைப்பின் பிரதிநிதி திரு. ஸ்ரச்சர் போல் ஹொஸ்ட் ஆகிய இருவருமே இங்கு வருகை தந்தவர்கள் ஆவர்.

இவர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பகுதிகளில் நிவாரண வேலைத் திட்டங்களுக்கு நோர்வே அரசு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் தரப்பில் கேட்கப்பட்டது

விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு குறித்தும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இருவரும் நேற்று முன்தினம் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தாம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளும் செயல்திட்டங்களையிட்டும் மேலும் தாம் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்தும் விளக்கிக் கூறினர்.

யாழ். அரச அதிபர் மற்றும் வங்கி அதிகாரிகளையும் இருவரும் சந்தித்தனர்.

''நொறாட்'' அதிகாரி ஜெய்பூர் நிறுவனத்தின் பிரதிநிதிகள், றோட்டரிகழகப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினார். (அ-3)

## ஜெலட்டின் மீட்பு

திருச்சி மாவட்டம் - கடலூருக்கு அருகே தரங்கம்பிட்டிக் கிராமத்தில் விவசாயி ஒருவரின் வீட்டில் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட டெற்றனேற்றர்களையும், ஜெலட்டின் குச்சிகளையும் பொலிஸார் கடந்த திங்களன்று கைப்பற்றினர் என்று இந்திய வானொலி அறிவித்தது. (உ; எ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல்-1993**
(கலாநிதி, முதுமெய்யியல் மாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1992/93 ஆம் கல்வியாண்டில் பின்வரும் பாட நெறிகளுக்கு, பட்டப்பின் படிப்பிற்காகத் தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், அரசியல், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, வர்த்தகம், தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், மொழியியல், நுண்கலை, நாடகமும், அரங்கியலும், சித்தமருத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் ''நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம்'' என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 10/- இற்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 8/- பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச் சுய விலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1993 07–10ஆம் திகதிக்கு முன்பாக, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்வி வெளியீட்டுக் கிளை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1993-07-10 ஆம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.

(சி-5225)


## படையினர் சூடு! அராலி கடலில் மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

அராலிக் கடற் பிராந்தியத்தில் கடற்படையினர் நேற்று முன்தினம் மூன்றாவது தினமாக பீரங்கித் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கடற்றொழிலாளி ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறை தம்பாட்டியில் இருந்து இடம்பெயர்ந்து நவாலியில் தங்கியுள்ள அன்னரத்தினம் புவீந்திரன் (வயது 17) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவர் ஆவார்.

படையினரின் தாக்குதலின் போது ஏனைய கடற்றொழிலாளர்கள் தமது வலைகளைக் கைவிட்டு கரைசேர்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் கடற்படையினரின் தாக்குதல் காரணமாக பொன்னாலைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களும் தமது தொழிலைக் கைவிட்டு திரும்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-17-15]

## முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பிரதம தபாலகத்திற்கு ரூபா 5 லட்சம் பெறுமதியான முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

ஒரு ரூபா முதல், 10 ரூபா வரையிலான பெறுமதியுடைய முத்திரை வகைகளும் மற்றும் வான் கடிதங்களும் 'குமாரி' கப்பல் மூலம் வந்து சேர்ந்துள்ளன. (ஒ-5-17)


புங்குடுதீவு மேற்கு பிட்டியம்பதி
ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய
**வருடாந்த மஹோற்சவ தினம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 17 - 06 - 1993 | வியாழக்கிழமை |
| தேர்த்திருவிழா | 25 - 06 - 1993 | வெள்ளிக்கிழமை |
| தீர்த்தத்திருவிழா | 26 - 06 - 1993 | சனிக்கிழமை |

★ என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: மேற்படி ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களையும் மஹோற்சவ உபயகாரர்கள் அனைவரையும், தவறாது 13 – 06 – 1993 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மாவடி மரக்காலை காணியில் அமைந்துள்ள இல. 264 இல்லத்திற்கு சமூகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- பரிபாலன சபை.

(26059)



தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்
**புதிய பேராயரைப் பதவியில் அமர்த்தும் நிகழ்வு**

சென்னை தென்னிந்திய திருச்சபைப் பேராலயத்தில் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயராக அருட் பொழிவு பெற்ற பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் (B. A., Dip - in - Ed., M. A., B D., Ph. D.) அவர்களை தென்னிந்தியத் திருச்சபை - யாழ். பேராயத்தின் மூன்றாவது பேராயராக பதவியில் அமர்த்தும் நிகழ்வு வழிபாடு ஜூன் மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு பேராயர் டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்களின் தலைமையில் வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து புதிய பேராயருக்கு யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் வரவேற்பு நிகழ்வு ஒன்று இடம்பெறும்.

இந் நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கப்படுகின்றீர்கள்.

அ. அ. போல்,
செயலாளர்,
தென்னிந்தியத் திருச்சபை யாழ். பேராயம்.

(சி-5239)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், தையல் மெஷின், நீரிறைக்கும் இயந்திரம், கிற்றார், ஓகன், வயலின், வீணை, மெத்தைகள், காப்பெற் வகைகள், சிறிய சைக்கிள், கடைக்குரிய கண்ணாடி அலுமாரிகள், கிளாஸ், செரமிக் வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய பொருள்களும் விற்பனைக்குண்டு. 275, பிரதான வீதி யாழ்ப்பாணம். (26044)

உருத்திர வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: Dr. சபாரத்தினம் மூளாய் வீதி, (மாவடிச் சந்திக்கு அருகில்) வட்டுக்கோட்டை. (26032)

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவ நெறி ஆண்டு 8. ஆக்கம்: க. சந்திரசேகரம், கைதடி டுத்துக்குமார சுவாமி ம. வி. வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். ஏகவிநியோகஸ்தர்கள் சோதி புத்தகசாலை. மீன் சந்தை முன்பாக பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5222)

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (S.L.A.S.) க. பொ. த. (உயர்தர) சேர்வுக்குரியது ஆக்கியோன்: D. Sam கிடைக்கும் இடங்கள்: புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் (யாழ்.), ஸ்ஃபாரிஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், பாரதி கல்வி நிலையம், சித்தன்கேணி. (26051)

## இடமாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

## ENGLISH

English Grammar for G. A. Q. (E S L). Spoken English G. C. E. (O/L), விரிவான விளக்கத்துடன் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் கற்பிக்கப்படுகிறது. Mr. R. Sivaligam (Dip – in – English) புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (சி/4799)

## குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியல்கள், சுத்தமானவை சுவையானவை பருகிக் களிப்படைவீர் தயாரிப்பு: விநியோகம்: Siva Industries, 35/3, Colombogam Road Chundikuli. (சி-5307)

## "A" LEVEL CENTRE

1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**94, 95**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

CHE —
திரு. நாகரட்ணம் Bsc
PHY —
திரு. ஜெயசீலன் Bsc
BOT —
திரு. சிவவீரசிங்கம் Bsc
ZOO —
திரு. ஞானேந்திரன் Dip In Sc
PURE / APP —
திரு. நித்தியானந்தன் Bsc

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
(சி/4796)

# மணிவிழா

## லயன் செ. துரைசிங்கம்

லயன் செ. துரைசிங்கம் (அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரமுகரும், இளைப்பாறிய யாழ். கல்வித் திணைக்கள (O. A.) அலுவலக உதவியாளரும்.)

இடம்: நல்லூர் பரி. யாக் கோபு ஆலயசபை மண்டபம்
காலம்: 12 - 06 - 1993 சனி பி ப 3. 00 மணி
தலைமை: திரு கி. வேலாயுதம்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

"துரை மணிவிழா ஏடு" வெளியிடப்படும்

மணிவிழாக் குழுவினர்

(6248)

# பாராட்டு விழா

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹோற்சவத்தின் போது பக்தி பூர்வமாகவும் வேதாகமக் கிரியா முறைப்படியும் திறம் பெறக் கிரியைகளை நடத்தி வைத்த தேவஸ்தான பிரதம கிரியாகுரு

பிரம்மஸ்ரீ

## பூ. பூரணசந்திரகுருக்கள் ஐயா

அவர்களை

பாராட்டி இன்று (11 - 06 - 1993) வெள்ளி மாலை 6-00 மணிக்கு ஆலயமண்டபத்தில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

— ஆலயத் தொண்டர்கள்.

(சி-5238)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றி வரும் வேளையில் 09-06-1993 இறைபதம் அடைந்த

உயர்திரு


## கார்த்திகேசு ஆறுமுகராஜா (B. Com.)

அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீரஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
ஊழியர்கள்.

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி. (26055)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராசேந்திரம் மகேந்திரநாதன்

(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன மின் அமைப்பாளர்)

மலர்வு: 12 — 05 — 1945
உதிர்வு: 03 — 06 — 1991

திதி: 11 - 06 - 1993

ஆண்டிரண்டு ஓடி மறைந்ததப்பா
ஆனாலும் உங்கள் அன்பு முகம் மறையவில்லை.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

இல: 09, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். [6247]

# அரசாங்க அறிவித்தல்

சுகாதார திணைக்களம்

## பகிரங்க ஏலவிற்பனை

## பிளாஸ்டிக் வெற்றுப் பீப்பா

எனது பணிமனையில் உள்ள சுமார் 100 லீற்றர் கொள்ளக்கூடிய வெற்றுப் பீப்பாக்கள் எதிர்வரும் 18-06-1993ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9-30 மணியளவில் ஐந்து பகுதிகளாக பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலவிற்பனையில் பீப்பாக்களைப் பெறுபவர் உடனே பணத்தைச் செலுத்திப் பீப்பாக்களை அப்புறப்படுத்த வேண்டும். பீப்பாக்களைப் பார்க்க விரும்புவோர் 15-06-1993 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி பொ, இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்,

சுகாதார சேவைகள் பிராந்திய-
பணிப்பாளர் பணிமனை,
59, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்.
09-06 1993 (சி-5308)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L இறுதிப் பிரிவு DAY CLASSES

ஆரம்பம்: 12 - 06 - 1993
11-15 மணி

● அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-5309)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07-06-1912
மறைவு: 23-05-1992

திதி:- 11-06-1993

குடும்பத்தின் ஒளி விளக்காய், பொறுமையின் இலக்கணமாய் விளங்கிய

அமரர்

## கணபதிப்பிள்ளை இளையதம்பி

[லிங்கம் ஸ்ரோர்ஸ், மல்லாகம்]

நன்மக்கள், மருமக்கள், பேரர், சுற்றமெல்லாம்
நினைவினில் அன்பாய்க்கண்டு நீள் தவத்தான்மா
—காணும்

கனவென வாழ்வு நாளைக்
கருதினான் தேவனானான், மனமொழி வாக்கால்
அந்த மகாத்மாவை வணங்குகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம். (5948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூன்றாண்டுகள் முடிகின்றன

இன்று ஜூன் பதினொராம் திகதி. ஈழப் போர் இரண்டு ஆரம்பமாகி மூன்று ஆண்டுகள் நிறைவுறும் தினம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் போர் பல அவலங்களைத் தந்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு நாளாந்தத் துன்ப துயரங்கள் மலிந்து போயுள்ளன. மக்கள் தமது சொந்தக் கிராமங்களில் வாழமுடியாது இடம் பெயர்ந்து அவலமுறுகிறார்கள். மனித வாழ்க்கையின் கொழு கொம்புகளான தொழில், வருமானம், உணவு கல்வி, குடும்பப் பிணைப்புகள் என்பவற்றை இழந்தும், பாதிப்புற நேர்ந்தும் நிர்க்கதியான வாழ்க்கைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

அதனால் அவர்கள் முற்றிலும் வேறு பரிமாணம் உள்ள புதிய வாழ்க்கைக்குத் தங்களைப் பழக்கப்படுத்த வேண்டியதாயிற்று. ஆகையால் தொடர்ச்சியாகத் துன்பம் விளைக்கும் போரின் மூன்றாண்டு நிறைவு கொண்டாட்டத்துக்கு உரியதல்ல என்ற மனப்பாங்கு மக்களிடம் பிறக்கலாம்.

ஆனால் அடுத்த பக்கத்தையும் நோக்காது இருக்க முடியாது. மூன்றாண்டு நீடிக்கும் தொடர்ச்சியான போரின் பல நல்ல விளைவுகளை இனங் காணவும் அவை குறித்து திருப்தியுறவும் தவறக்கூடாது.

தமது வாழ்வே நசிந்திடினும், உயிரே நீங்கிடினும் விடுதலையும் உரிமைகளும் கைக்கு வரும்வரை தமிழர்கள் அவற்றுக்காகப் போராடுவார்கள் என்பதை கடந்த மூன்று வருடங்களும் தென்னிலங்கை மக்களுக்கும் அரசுக்கும் மட்டுமன்றி உலகத்துக்கும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

பொருளாதாரத் தடை போக்குவரத்துத் தடை என்பன அவர்களது வாழ்க்கையை நலிவுறச் செய்த போதிலும், தமிழர்கள் அவற்றுக்கும் ஈடு கொடுத்து புதிய வாழ்க்கை இயல்புமுறை ஒன்றை அமைக்க வல்லவர்கள் என்பதையும் இந்த மூன்று ஆண்டுகளும் எடுத்தியம்பி உள்ளன

வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களும், கொழும்புப் பொருள்களும் கிடைக்கா விடினும், தற்சார்புப் பொருளாதாரக் கட்டமைப்பை உண்டாக்கி தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தமிழர்கள் வல்லவர்கள் என்பதும் கடந்த மூன்று வருடங்களாக நிரூபிக்கப்பட்டு வருகிறது.

இவற்றைப் போல, கஷ்டத்திலும் நன்மை என்ற வகையில், பல பொருளியல், சமூக, கலாச்சாரப் புத்தெழுச்சிமிக்க மாற்றங்களும் மூன்றாண்டு யுத்தத்தின் விளைவுகள் என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

மேலும் யுத்தம் ஓய்ந்து அமைதியும் சமாதானமும் உதிக்க வேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பமாகும் யுத்தச் சூழல் தொடரவேண்டும் என அவர்கள் எப்போதும் விழைந்ததில்லை.

யுத்தம் மூன்றாண்டுகள் நீடித்த போதிலும் அதனை முடிவுக்குக் கொண்டு வருவதில் கொழும்பு அரசு உரிய அக்கறையும் கரிசனையும் கொள்ளாதிருக்கிறது. யுத்தத்தை நிறுத்தி, பேச்சு வார்த்தைகள் மூலம் நியாயமான முறையில், நீதியான வழியில் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அது எப்போது மனங்கொள்ளப் போகிறது? தமிழர்களை அடக்கி ஆள்வதென்ற தனது அழுங்குப் பிடியைத் தளர்த்தி அவர்கள் தமது அபிலாசைகள் நிறைவேறி, சுய கௌரவத்துடன் வாழக் கூடியதாக அமைதி நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற புதிய சிந்தனை புதிய அரசுக்கு இன்றைய தினத்திலாவது உதிப்பதாகுக.

---

பிரிட்டிஷ் வைத்திய உபகரணங்கள்:

# யாழ். கொண்டுவருவதற்கு கூட்டுப்படைகள் அனுமதி

யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு பிரிட்டன் வழங்கிய 15 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கிவிட்டது.

இந்த நவீன வைத்திய உபகரணங்களை இரண்டு கப்பல்களில் எடுத்து வருவதற்கு கொழும்பில் துரித ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இத்தகவல்களை கொழும்பு சென்று திரும்பிய யாழ். போதனா ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் செல்வி க. நவமலர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இருபத்தைந்து கொள்கலன்களில் வைக்கப்பட்டிருக்கும் வைத்திய உபகரணங்களை இங்கே கொண்டு வருவதற்கு இதற்கெனப் பிரத்தியேகமாக இரண்டு கப்பல்களை வாடகைக்கு அமர்த்த வேண்டி உள்ளதாகவும் அவர் சொன்னார்.

எவ்வாறெனினும் இம்மாத இறுதிக்குள் அவற்றை யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்ப்பதற்கான சகல ஒழுங்குகளும் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் ஆஸ்பத்திரிக்கென வழங்கப்பட்ட 200 கே.வி. ஜெனரேற்றர்கள் இரண்டும், மற்றும் பழுதடைந்திருக்கும் ஜெனரேற்றர்களுக்கான உதிரிப் பாகங்களும் பிரத்தியேக சப்பல்களில் கொண்டு வரப்படும் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-17)

## ஆலயங்களில்....

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் இன்று சுக்கிர வார உற்சவம் நடைபெறும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள — பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான — தட கள விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. பிரதேச செயலர் செல்வி. ரூபிணி கனகரத்தினம் நிகழ்வுக்கு தலைமை வகிப்பார். யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து' வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-12)

o o o

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:—

**15 வயதுப் பிரிவு**

★ காலை 9 00 மணி:- சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி— சென். ஜோன்ஸ் மைதானத்தில்

**17 வயதுப் பிரிவு**

★ காலை 8.30 மணி:— கனகரத்தினம் ம. ம வி. எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி — கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில்.

0 0 0

யாழ் மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ 3. 30 மணிக்கு:— ஊரெழு றோயல் எதிர் உரும்பராய் திருக்குமரன்.

★ 4.30 மணி:— மயிலங்காடு ஞானகலா ''ஏ'' அணி எதிர் ஆனைக்கோட்டை அறிவொளி ''ஏ'' அணி

o o o

யாழ். பல்கலைக் கழகம் ''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ 3.45 மணி;— பல்கலைக் கழகம் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி

★ 4.45 மணி:— பல்கலைக் கழக கூட்டு அணி எதிர் பற்றிசியன் அணி

(உ)

## பொலிஸார்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

தடுப்புக் காவலில் உள்ள 60 விடுதலைப் புலிகளை விடுதலை செய்வதற்கும் அரசாங்கம் இணங்கியது. ஆனால் இந்த வேண்டுகோளுக்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

தடுப்புக் காவலில் உள்ள முழு விடுதலைப் புலிகளின் பெயர்ப் பட்டியலை விடுதலைப் புலிகள் இயக்கம் கேட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சு இக் கோரிக்கையை நிராகரித்து விட்டது.

விடுதலைப் புலிகள் தலைமைப்பீடம் விடுதலை செய்ய விரும்பும் தமது அங்கத்தவர்களின் பெயப்பட்டியலை அனுப்பி வைக்கும்படி பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டு உள்ள பொலீஸாரைச் சென்று பார்ப்பதற்கு அவர்களின் நெருங்கிய குடும்ப உறவினர் ஒருவருக்கு அனுமதி வழங்கும் படி பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து முயற்சிகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

## புதிய பேராயர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 11

தென் இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்தின் மூன்றாவது பேராயராக சென்னையில் திருநிலைப் படுத்தப்பட்ட அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கிளிநொச்சியில் கடந்த சில நாட்கள் தங்கியிருந்த அவர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

அவருடன் முன்னாள் பேராயர் அதி வண. டி. ஜே. அம்பலவாணரும் வந்து சேர்ந்தார்.

புதிய ஆயரின் பதவி அமர்வு வைபவம் நாளை வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறவிருக்கிறது.

[இ-3]

## கருத்தரங்கு

யாழ். மாநகரசபை பகுதியில் கடந்த 5 ஆம் திகதிமுதல் அனுஷ்டிக்கப்பட்டு வரும் சுகாதார எழுச்சி வார நிகழ்ச்சிகளின் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பின்வரும் இடங்களில் சுகாதாரக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

முற்பகல் 11 மணிக்கு"புனித மரியாள் பாடசாலை, பிற்பகல் 3 மணிக்கு தண்ணீர் தாங்கி வீதி, பிற்பகல் 4 மணிக்கு திருவள்ளுவர் ச. ச. நிலையம், முற்பகல் 9 மணிக்கு குருநகர் தொடர்மாடி, அரியாலை ச. ச. நிலைய பாலர் பாடசாலை, முற்பகல் 10.30 மணிக்கு ஆனந்த வித்தியா சாலை, பிற்பகல் 3 மணிக்கு செஞ்சோலை, முற்பகல் 10 மணிக்கு மங்கையர்க்கரசி வித்தியாசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, பிற்பகல் 3 மணிக்கு அத்தியடி ச ச. நிலையம், முற்பகல் 8.30 மணிக்கு இளையதம்பி வித்தியாசாலை முற்பகல் 10.30 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலயம், பிற்பகல் 3 மணி கண்ணாபுரம் ச. ச. நிலையம், லோட்டன் வீதி பாரம் ச. ச. நிலையம் ஆகிய இடங்களில் கருத்தரங்குகள் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-30-5)

# யுத்த நிறுத்தம் செய்யுமாறு கோரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே தருகிறோம்:-

கேள்வி: சமாதானத்தைக் கொண்டு வரும் பணியில் தங்களின் அடுத்த நடவடிக்கை என்ன?

திரு. வில்லியம் (சமாதானக் குழுவின் செயலாளர்):- எமது பணி மூன்று கட்டங்களிலானது

முதலாவது—இலங்கை இனப்பிரச்சினைபற்றி பிலிப்பீன்ஸில் மாநாடு நடத்தப்பட்டது.

இரண்டாவது — கொழும்பில் சர்வமதக்குழு அமைக்கப் பட்டது.

மூன்றாவது — இந்த நடைமுறையின் இறுதிக்கு வந்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மடு, கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, அம்பாறை மாவட்டங்களுக்குச் செல்லவிருக்கின்றோம்.

அதன் பின்னர் நாம் ஓர் அறிக்கை தயாரிப்போம். அதனை கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள சர்வமதக் குழுவுக்கு சமர்ப்பிப்போம்.

### நீண்டகால சமாதானத் திட்டம்

சர்வமதக்குழு எமது அறிக்கையையும் பிலிப்பீன்ஸ் மாநாட்டு அறிக்கையையும் கவனத்துக்கு எடுத்து, இலங்கைக்கான நீண்டகால சமாதானத் திட்டம் ஒன்றை தயாரிக்கும்.

நாம் இங்கு பார்த்தவை, கேட்டவை, அறிந்து கொண்டவை, அவற்றினால் நாம் உணர்ந்துகொண்டவை ஆகியவற்றை கருத்திற்கு எடுத்தே நீண்டகால சமாதானத் திட்டம் தயாரிக்கப்படும்.

சமாதானத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான சில உத்திகளைத் திட்டமிடும் நோக்குடன் சில முன்முயற்சிகளை எடுப்பதற்கே நாம் இங்கு வந்துள்ளோம்.

### பேச்சுக்களால் முடியும்

இறுதியில் தீர்வு ஒன்றைக் காணுவது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெறும் பேச்சுகளால் தான் முடியும்; சர்வமதக் குழுவினால் அல்ல.

சமாதானப் பணியின் இறுதி நடவடிக்கை சர்வமதக் குழுவில் தங்கியிருக்கவில்லை: இந்த நாட்டில் வாழும் தரப்பினர்களில் தான் தங்கியுள்ளது.

கேள்வி: சமாதானக் குழு கொழும்பு திரும்பியதும் யுத்த நிறுத்தம் ஒன்றை பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாகக் கொண்டுவர முயற்சி எடுக்குமா?

செயலாளர்: சமாதானக் குழு கொழும்பு திரும்பியதும் அங்குள்ள சர்வமதக் குழுவிடம் சமர்ப்பிக்கும் அறிக்கையில் சில சிபார்சுகள் தெரிவிக்கப்படும். அவற்றில் இதுவும் இடம்பெறலாம்.

கேள்வி: மீண்டும் உங்கள் சமாதானக் குழு யாழ்ப்பாணம் வருமா?

செயலாளர்: இச் சமாதான முயற்சியின் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் அதன் எதிர்கால நடவடிக்கை அமையும். சமாதானம் மந்திரக் கோலால் கொண்டு வரப்படும் ஒன்றல்ல தியாகங்கள், முன்முயற்சிகள், அங்கும் இங்குமாகப் பயணங்கள் ஏராளம் இப்பணியில் இடம்பெற வேண்டி உள்ளன.

கேள்வி: சமாதானக் குழுவின் முயற்சி பலன் தரும் என்று எல்லோரும் எதிர் பார்த்துள்ளார்கள். இந் நிலையில் யாழ்ப்பாண மக்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

செயலாளர்: எம்மிடம் சில யோசனைகள் உள்ளன. அவை பற்றி உங்களுக்குத் தெரிய வரும். நாம் எடுக்கும் முயற்சிகள், நடவடிக்கைகள் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கப் படும்.

### பொலீசார் விவகாரம்

கேள்வி: விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டில் உள்ள பொலீஸ்காரர்கள் மற்றும் இராணுவச் சிப்பாய் ஆகியோரை விடுவிக்கும் தங்கள் முயற்சி பலனளித்ததா?

செயலளார்: எமது யாழ். விஜயத்தின் நோக்கங்களில் முன்னுரிமை பெற்ற விஷயங்களில் இதுவும் ஒன்று சிறைக் கைதிகளாக உள்ள 39 படையினரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி தென் பகுதியில் உள்ளவர்கள் எம்மிடம் கோரியிருந்தனர்.

இது விஷயமாக நாம் இங்கு விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேசினோம். சிறையில் வைக்கப்பட்டுள்ள அவர்களைச் சந்திக்க அனுமதி தருமாறு விடுதலைப் புலிகளைக் கேட்டோம். அவர்கள் அனுமதி வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து நேற்று (வியாழன்) காலை நாம் பொலீஸாரைச் சந்தித்துப் பேசினோம். அவர்கள் தங்கள் பிரச்சினைகளைச் சுருக்கமாக எம்மிடம் தெரிவித்தனர். தங்களின் செய்தியை எடுத்துச் சென்று அரசிடம் சமர்ப்பிக்கும்படி அவர்கள் எம்மைக் கேட்டுள்ளனர்.

படையினரை விடுவிக்கும் பிரச்சனை சர்வதேச மதக் குழுவின் முன்னுரிமை பெற்றதொன்றாகும்.

### சர்வதேச நோக்குடன்

கேள்வி; இனப்பிரச்சினையை சர்வதேச அரங்குக்கு எடுத்துச் செல்ல சர்வமத சமாதானக் குழு நடவடிக்கை எடுக்குமா;

செயலாளர்: எமது சமாதானக் குழுவே சர்வதேசக் குழு தானே! இச்சமாதானக் குழு சர்வதேச நோக்கை மனதில் கொண்டே செயற்படும்.

### சமாதான வலயம்

கேள்வி: பூநகரி மற்றும் மடுப்பகுதி ஆகியவற்றை சமாதான வலயமாக்க சமாதான குழு முயற்சி எடுக்குமா?

பிலிப்பீன்ஸ் ஆயர்: இது குறித்து நாம் சில யோசனைகளைக்கொண்டுள்ளோம். முதலில் இடங்களை பார்வையிட வேண்டும் பின்னர் விடுதலைப் புலிகளுனும் அரசாங்கத்துடனும் பேச வேண்டும்.

கேள்வி: இச் சமாதானக் குழு யாழ் வருவதற்கு முன்னர் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்துப் பேசினீகளா?

வண. சோமாகே குளாக்கிற்றோ தேரர்;

இப்போது தான் சமாதான முயற்சி ஆரம்பமாகி உள்ளது. யாழ். வருவதற்கு முன்னர் மல்வத்தை மற்றும்' அஸ்கிரிய பீடாதிபதிகளை நாம் சந்திக்கவில்லை. திரும்பியதும் சந்திக்க முயற்சிப்போம்.

இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள், எமது செய்தி தெற்கை அடைந்ததும் இவர்களைச் சந்தித்துப் பேசுவோம் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக நான் என்ன தியாகமும் செய்யத் தயாராகவுள்ளேன்.

(அ-எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கெக்ரர் குணசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தொட்டிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா கெகிரர் குணசிங்கம் 10-06-93 இல் காலமானார்.

இவர் அற்புதமலரின் அன்புக் கணவரும், இவோன் கீதாஞ்சலி (மாலைதீவு), பிரதீபன் (யாழ் பல்கலைக் கழகம் இறுதி வருடம்), குணதீபன் (குவைத்), ஜெபதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜேசுரட்ணம் தயாபரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரின் இறுதி ஆராதனை மேரிலாண்ட் ஏழாலை வடக்கு இல்லத்தில் நேற்று (10-06 93) பிற்பகல் 3 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஏழாலை வடக்கு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. பிரதிபன்
(மகன்)

ஏழாலை வடக்கு,
ஏழாலை.
(சி/2914)

## நன்னித்தம்பி கந்தையாபிள்ளை

கந்தரோடையைச் சேர்ந்த நன்னித்தம்பி கந்தையாபிள்ளை (சிங்கப்பூர்) 08-06-93 அன்று காலமானார்.

இவர் காலம்சென்ற நன்னித்தம்பி தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற வீரசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியவதியின் அன்புக் கணவரும், டாக்டர் விஜயகாந்தன் (கனடா), பிறேமகாந்தன் (கணக்காய்வாளர் - கொழும்பு), புஸ்பகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் விஜயலக்சுமி (கனடா), ராஜினி (கிஸ்ரன் எஸ். எம்.- என். கோ. கொழும்பு, யமுனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சுப்பிரமணியம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, காலஞ்சென்ற சரஸ்வதி, பகவதி, காலஞ்சென்ற மலர்வதி ஆகியோரின் மைத்துனரும். நிரஞ்சன், ஆனந், பிரகாஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை (12-06-93) காலை 10 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கந்தரோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாக்கியவதி
(மனைவி)

கந்தையாவாத்தியார் வீதி,
கந்தரோடை. (5952)

## கார்த்திகேசு ஆறுமுகராசா

சுதுமலை வடக்கைச் சேர்ந்த கார்த்திகேசு ஆறுமுகராசா (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) நேற்று 10 - 06 - 93 காலை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு, திருமதி கார்த்திகேசு நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், திலகரத்தினத்தின் (பிரதம பொறியியலாளர், கட்டடத் திணைக்களம் - கண்டி) அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10 - 06 - 93 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி கா. நாகரத்தினம்.
[தாய்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். [26058]

## திருமதி விஜயநாதன் மகேஸ்வரி

தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி 9-6-93 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஜயநாதனின் (R.D.O) அன்பு மனைவியும், ஜெயந்தி, விக்னேஸ்வரராஜா (ராஜன் — Lanka cement Co), விஜித்தன் (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வக்குமார், சாரதா ஆகியோரின் அன்பு மாமியும், லதீப்குமார், சுரேக்கா, ரஜீவ்குமார், துஷிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வேலுப்பிள்ளை Guard), சரசபூபதி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கிளிநொச்சி), சாவித்திரிதேவி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, மகாலிங்கம் (அப்பாச்சி), கமலாதேவி, அமிர்தலிங்கம், உருக்குமணி ஆகியோரின் அன்புச் சோதரியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
விக்னேஸ்வரராஜா (ராஜன்)
(மகன்)

''துவாரகை''
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (5951)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வடக்கு கிழக்கு யுத்தம் 3 ஆண்டுகள் பூர்த்தி!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே யுத்தம் தொடங்கி இன்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன.

முஸ்லிம் இளைஞர் ஒருவர் தான் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறி அது பற்றி முறையிட மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு சென்ற சமயம் பொலிஸார் அவரை தாக்கினர். அது குறித்து தகவல் பெற பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற விடுதலைப் புலிகள் போராளிகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். அதனையடுத்து 1990 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி மட்டக்களப்பில் சண்டை மூண்டது.

ஜூன் மாதம் 14 ஆம் திகதி சண்டை யாழ்ப்பாணத்திலும் வெடித்தது.

சண்டையை நிறுத்த மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளும், யுத்த நிறுத்த அறிவிப்பும் குழம்பிப் போகவே 1990 ஜூன் 18 ஆம் திகதி ஸ்ரீலங்கா அரசு வடக்கு கிழக்கில் போர் பிரகடனம் செய்தது.

அப்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த திரு. ரஞ்சன் விஜேரத்தினா தமிழர்கள் மீதான போர் பிரகடனத்தை பகிரங்கமாக அறிவித்தார்

பெரும் அழிவுகள் இழப்புக்களுடன் தொடரும் இந்த யுத்தம் நான்காவது ஆண்டினுள் தற்போது பிரவேசிக்கிறது. (இ-5)

### மன்னாரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமுற்ற பொலிஸாரில் ஒருவர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

- ★ ரி 56 துப்பாக்கி — 3
- ★ அவற்றுக்குரிய மகஸின் — 11
- ★ நடுத்தர ரவைகள் — 1303
- ★ ஏ.கே மகஸின் ஹோல்ஸர் — 4
- ★ 5.56 மி. மீ ரவைகள் — 164
- ★ 84 எஸ் ரக மகஸின் — 1
- ★ என் 4 கிரனேட் — 14
- ★ செயின்பெட்டி — 4
- ★ தலைக்கவசம் — 1

### சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின் போது சமாதானக் குழுவினர் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

தம்மை விடுவிக்க அரசு விரைந்து நடவடிக்கைஎடுக்கத் தவறினால் திட்டமிட்டபடி எதிர்வரும் 13 ஆம் திகதிமுதல் தாம் சாகும் வரை உண்ணா விரதம் இருக்கப் போவதாக அந்த மகஜரில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-5)

### கடற்காற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இப் பகுதியில் சுமார் 250 விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் அவர்களை வெளியேற்றவே இந்த ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும்—

'சுமண' இராணுவ நடவடிக்கையை அடுத்து தொப்பிகல காட்டுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் இப் பகுதிகளுக்குச் சென்றுள்ளதாகவும் இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-5-6)

### பூநகரி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாக ஆராய்ந்தனர். என்றும்—

பேச்சுக்களை முடித்துக் கொண்டு நேற்று இங்கிருந்து புறப்பட்ட பீற்றர் நிக்கலஸ் மீண்டும் அடுத்த வாரம் இங்கு வருவார் என்றும் !

அவ்வேளை இந்த ஒப்பந்தம் தொடர்பாக இறுதிக் கட்டப் பேச்சுக்களை நடத்துவார் என்றுப் தெரியவருகிறது.

நேற்று பலாலிக்கு செல்ல முன்னர் திரு. பீற்றர் நிக்கலஸ் உதயனுக்கு தகவல் தருகையில் மேலும் கூறியதாவது:—

பூநகரிப் பாதை திறப்பது தொடர்பான விடுதலைப் புலிகளுக்கும் அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் கீழ் பாதை திறப்பது சம்பந்தமான வழிமுறைகள் பற்றி விரிவாக ஆராய்ந்தோம்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் உடன்பாடுகாண வேண்டியிருக்கிறது,

மிக விரைவில் நான் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேசவும், சில விடயங்கள் குறித்து தெளிவு பெறவும் [illegible] றார்.

### கைதாகும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம்சைப்படுத்தப்படுகின்றனர் என்று தமிழ் அரசியல் கட்சிகள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே பிரதமர் மேற்கண்ட முடிவை எடுத்தார்.

அப்பாவித் தமிழர்கள் கைதாவதைத் தவிர்ப்பதற்காக 5 அம்சத் திட்டம் ஒன்றை பிரதமர் தயாரித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி குமாரசாமி

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் பாடசாலையின் முன்னை நாள் ஆசிரியை திருமதி சரஸ்வதி குமாரசாமி காலமானார்.

இவர் கூட்டுறவாளரும், ஆசிரியர், தொழிற்சங்கவாதியுமான கோப்பாய் திரு க. இ. குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவகுமார், திருமதி இந்திரகுமாரி (ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), காலஞ்சென்ற திருமதி அரவிந்தகுமாரி(முன்னை நாள் ஆசிரியை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), திருமதி கிரிஜகுமாரி (லண்டன்) வைத்திய கலாநிதி திருமதி வசந்தகுமாரி (லண்டன்), உருத்திரகுமார் (டிறெக்ரர், அக்கவுண்டிங் சேவிஸ், கொழும்பு-4] ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. இ. சிவானந்தன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்விக் கோட்டம், மருதனார்மடம்), காலஞ்சென்ற சட்டத்தரணி சோ. லோகேஸ்வரன் (கொழும்புத்துறை), திரு த. ஜெயரத்தினம் (தொழில் முகாமையாளர் லண்டன்), திரு. க. மகேசன் (சொலி சிற்றர், லண்டன்) ஆகியோரின் மாமியாரும், திருமதி தவமணி சுப்பிரமணியத்தின் (ஆசிரியை) சகோதரியும், சுசீந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி, மாணவன்), அகிலன் (யாழ். பரியோவான் கல்லூரி, மாணவன்.), ஜனத்தன், ஜெய்ராம், ஜெய்ஹரி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஆசிரியர் க. திரு. இ. சரவணமுத்து, சுப்பிரமணியம், திருமதி க. சிவக்கொழுந்து என்பவர்களின் மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாயில்(கிளுவானை ஒழுங்கை) இன்று (11-06-93) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் நடைபெற்று கோப்பாய் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உறவினர்களும், நண்பர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சிவானந்தன்
[மருமகன்]

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [26056)

## இரட்ணம் தமேந்திரா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட ரட்ணம் தமேந்திரா காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி பவுலின்மேரியின் அன்புக் கணவரும், யசோதா, இராஜகுமார், விஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ரட்ணம், திருமதி ஞானம்மா ரட்ணத்தின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை இராயப்பு, திருமதி அன்னம்மா இராயப்புவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரட்ணம் குணநாயகம் (உரிமையாளர், R.G. ஸ்ரேரர்ஸ் யாழ்ப்பாணம்), திருமதி மின்னோ, திரு பீற்றர், கிறிஸ்ரி யேசுதாசன், வசந்தன், இன்பநாதன், திருமதி றொமானி குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. பிரான்சிஸ் (உரிமையாளர், சாரிசென்ரர், யாழ்ப்பாணம்), திரு மரியநாயகம், திருமதி பொலின்வயலட் நவரெட்ணராஜா (வளன்புரம்), திருமதி ரஞ்சினிதேவி அன்ரன் (வளன்புரம்), திருமதி றோசா இயேசுதாசன், செல்வி திரேசா ராஜினி, திருமதி பிரேமினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக 54 றக்கா வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி விஜயா குணநாயகம்

54, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (26065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org